புதினப்பத்திரிகையாகப்
DUPLICATE
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதிஹு (1889)
ஆவணிமீ ௨௨௨
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ௵க்கு ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: „ ரூ. ௩-௭௫
தொடுவாய்ப்பகுதி: „ ரூ. ௩-௭௫.
தனிப்பிரதி சதம் -0௫.

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫0.
„	அரைக்கலம்	௪-00.
„	கால்கலம்	௨-௫0.
„	ஒரு அங்குலம்	-௫0.

அடுத்தமுறைகட்கு டைவிகிதங்களில் அரைவாசி.

புத்தகம் = ௩௧ } யாழ்ப்பாணம்:—ரௌத்திரிஹு வைகாசிமீ ௨௮௨, ௧௯௨0-ம்ஆ ஜூன்மீ ௧0௨. { இலக்கம்—௪௫.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா ணுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
போர்பூத்த சிவர்கந்தத் தினிது தாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானுர்தந்த
வார்பூத்த வதிவிச்சைதொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் நீங்கவே.

விளம்பரம்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாண்டகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்மம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைஇறுத்தலுக்கு ரூபா ௧0. கால் இறுத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
1 இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

ஜவுளிவிளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரிகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன தினுசான் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும் பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச் சேலை, சாதா சேலை, தாவணி மதுரை சன்னடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா, சூரத், கல்கத்தா, காஸ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, கெல்லூர், உப்பாடை, தயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பஞ்சுக்கச் சேலை வகையரா சகலதினுசுகளும் மொத்தத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தி யில்லாத சரக்குகளை திரும்பப் பெற்றுக்கொண்டு வேறுகோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடருக்கும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினாங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரேயிட் செட்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென்ஆபிரிக்கா மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியாடர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம் அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்கள்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணம்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். உடனே பணம்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய நேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்
மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலைக் கோபுரவீதி,
2 மதுரை. (இந்தியா).

சித்திரப் படங்களுடன் கூடிய

மானிடஜீவியசிந்தாமணி

இப்புத்தகம் அமெரிக்காக் கண்டத்திலுள்ள அநேக அரிய பெரிய சாஸ்திரங்களையும் நமது பூர்வீக கிரந்தங்களையும் ஆராய்ச்சிசெய்து எழுதப்பெற்றுள்ளது. இதில் தேகத்திலுள்ள எலும்பு, சதை, நாடி, நரம்பு முதலியவைகளைப்பற்றியும், தேகத்திலுள்ள ஈரல், இரைப்பை, சுவாசப்பை, சிறு குடல், பெருங் குடல் மூளை முதலிய சரீர அமைப்பைச் சித்திரப்படங்களுடன் எடுத்துக்காட்டியும், தேகத்திலுள்ள ஒவ்வொருஉறுப்புகளும் செய்யும் வேலை முறைப்பாடும், அப்படிச் செய்யத் தவறின் அதற்குக் காரணமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் ஒவ்வொரு ரோகங்களும் எந்தெந்தஸ்தானங்களிலிருந்து எவ்வெவ் விதமாய் உண்டாகின்றன வென்பதையும், அந் நோய்களுக்குப் பரிகாரமான இந்து, யூனானி, இங்கிலீஷ் முதலிய ஔஷதபாகங்களும், மருத்துவ சாஸ்திரம், சுகாதாரம், சிசுபரிபாலனம், பால்ய விவாகம், ஆண் பெண் சிசுஉற்பத்தி விபரம், ஆண் மலடு, பெண் மலடு முதலிய விபரங்களும், பாம்பு, தேள், நட்டுவக்காலி, வண்டுகடி முதலிய விஷக்கடிகளும் அவற்றிற்கான ஔஷத விபரங்களும், இன்னும் இவ்விடத்திற் சொல்ல முடியாத அநேக இரகஸ்யமான விஷயங்களுடனும் கூடியது. இப்புத்தகம் கைக்கொண்ட ஸ்திரீ புருஷர்கள் வைத்தியரைத் தேடவேண்டியதில்லை. இதன் விலை ரூபா 2; பெரியவெயிட் பேப்பர் பதிப்பு கலிக்கோபைண்டு விலை ரூபா 3 தபால்சார்ஜ் அணா 3. தொடுவாய்ப் பகுதிகளுக்கு தபால்செலவு அணா 6.

பிளேக், கலரா, மலேறியா முதலிய கொள்ளை நோய்களின் உற்பத்திவிபரங்களும் அவற்றிற்கான பரிகாரங்களும் விலை அணா ½.

F. M. S. மலாய்நாட்டி லுள்ளவர்கள் முற்பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர், எஸ். சந்திரசேகர்,
கும்பகோணம்,
3 இந்தியா.

ஜவுளி விளம்பரம்.

சுதேச ஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?

மதுரை எம். ஆர். வெங்கடாசலநாயுடு அண்டு சன்ஸ்

ஜவுளி கம்பெனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கவாறு உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுக்கங்கள், பலவித இங்கிலிஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா டோரியா சன்னடிச்சேலைகள் வகையராக்களும், சித்தாடை ரவிக்கைத்தினிசுகளும், காசி, பம்பாய், கல்கத்தா, புனா, சூரத், காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சீபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, கெல்லூர், உப்பாடை, தயிலி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு வியாபாரிகளுக்கும், சொந்தப் பாவிப்புக்காரர்களுக்கும், தேவையான தினிசுகளை விரும்பிக் கேட்கும்வண்ணம் நேரில்வருபவர்களுக்கும், பிறதேசவாசிகள் வி. பி.போஸ்ற்மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கும் அனுப்பிக்கொண்டு வருகிறோம.

தவிரவும், எங்கள் கம்பெனியில் பட்டுநாணயத்திற்கும், ஜரிகைக்கும் உத்தரவாதமாயிருப்பதால், பிறதேசவாசிகள் நம்பிக்கையாக ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்துவருகிறார்கள். ஒருமுறை உண்மையைச் சோதிப்பதற்காக எங்கள் விலைவிபர ஜாப்தா (Catalogue) வரவழைத்துச் சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கப்பூர், பினாங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி. மூலமாகவும், மற்றும் வி. பி. சட்டமில்லாத F. M. S. என்னும் பெடரேற, மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிகளுக்கு ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்டல் ஆடர் அனுப்பவேண்டும். அல்லது பாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

தமது ஆடரை எதிர்பார்க்கும்
எம். ஆர். வெங்கடாசலநாயுடு அண்டு சன்ஸ்.,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலைக்கோபுரவாசல்,
மதுரை.

M. R. V. NAIDU & Sons,
High Class Cloth Bazaar,
4 West Tower, Madura.

கவனியுங்கள்.

நம்பர் தினுசுகள்-சொற்பலாபம்-விலை சகாயம்.

பேர்பெற்ற கெட்டிச்சாய நூல்கம்பேனி எது?

மதுரை

மு. சு. ராமசாமிஐயர் கம்பேனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பேனியில் சொந்தப் பார்வையில் கை தேர்ந்த வேலைகாரர்களால் அலிஜரைன் என்ற மீபாசாயத்தில் உற்பத்தியாகிறநாட்டுச்சிகப்பு, கெட்டிச்சாயநூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24 ம் நம்பர் வரை. 1-ந் தரம் 2-ந் தரம் சாயங்களில் சுடர் அதாவது சுயவர்ணம் கால் கப்பு அரைக் கப்பு முழுக் கப்பு நிறங்களில் சாயந்தீர்ந்து 10 இறுத்தல் கட்டுகளும் டை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சீமை பென்னிகறுப்பு மாதிரி கெட்டி கறுப்பு சாயத்தில் 10-ம் நம்பர் முதல் 16×20×22××2430×40,ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 இறுத்தல் கட்டுகளும் டை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

டை நூல்களின் விலை சகாயமாயும் இழைப்புக்கு சிதரில்லாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. டை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பேனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினாங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல்விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர்களிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலூகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில் லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer,
Yarn Merchants,
Singara Topu Street,
5 Madura, S. INDIA.

ஔஷத விளம்பரம்.

மகான்களே!

அடியிற் குறித்திருக்கும் நோய்களுக்கென்றே முறையாய் முடித்த ஔஷதங்கள் வேண்டியவர்கள் பின்வரும் விலாசத்துக்கு எழுதி தபால் மார்க்கமாய் செலவுகட்டி அழைப்பித்து நோயில்லா வாழ்வைப்பெறும்படி வேண்டுகின்றேன்.

அவையாவன;—(1) நீரிழிவு, நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர்சிறுப்பு, என்னும் பிரமியரோகங்களுக்கும், மேகப்பகுதிகளுக்கும் (2) குன்மநோய்களுக்கும், (3) கோழை, சுசம், இருமல் முதலியவைகளுக்கும, (4) வாதப்பகுதிகளுக்கும், (5) தொய்வு, ஈளை, மந்தாரகாசம் முதலியவைகளுக்கும், (6) கபாலக்குத்து, கண்குத்து முதலியவைகளுக்கும், (7) சூதகவாய்வுத் தொந்தங்களுக்கும், (8) உஷ்ணநோய்களுக்கும், (9) கட்டிகைகள், (10) பாண்டுப்பகுப்புகள், (11) பித்தரோகங்கள், (12) தேளுரத சிறுவர்களுக்குமாகியவைகளே.

நோயில்லா வாழ்வைக்கூடிய சீக்கிரத்தில் தரக்கூடிய தகுந்தஔஷதங்கள் தயாராயிருக்கின்றன.

அவையாவன:—(1) சூதசெந்தூரம், (2) ஜயகுலாந்தகசெந்தூரம், (3) ஆயகாந்தசெந்தூரம், (4) மிருத்துசஞ்சீவிமாத்திரை, (5) கஸ்தூரிமிருத்தியாதி, (6) கோரோசனைமிருத்தியாதி, (7) சந்திரோதயமாத்திரை, (8) மேகசஞ்சீவிகுழம்பு, (9) தாதுபுஷ்டிலேகியம், (10) மிருதசஞ்சீவி எண்ணெய், (11) நயனசஞ்சீவி, (12) கபாலசந்தனாதி, (13) சாலரோகமேகஎரண்டத்தயிலம், (14) மெழுகெண்ணெய், (15) தாளங்காயெண்ணெய், (16) புளிஎண்ணெய்வகைகள், (17) மிருதசஞ்சீவிதயிலம்,——மருந்துகளுக்கு வேண்டிய சரக்குகளும், வீ, பீ, மூலமாயனுப்பி வைக்கத்தயாராயிருக்கின்றன.

சி. ஆறுமுகம்பிள்ளை,
திருஞானபண்டிதருகதாசவைத்தியசாலை,
6 சின்னக்கடைத்தெரு திருக்கோணமலை.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான நிறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித் தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு நாகலிங்கம்பிள்ளை
பறங்கித் தெரு,
7 யாழ்ப்பாணம்.

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ரூ. ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	க0
இரண்டாம் பாலபாடம் … … … …	கரு
மூன்றாம் பாலபாடம் … … … …	உ0
நான்காம் பாலபாடம் … … … …	ங0
ஐந்தாம் பாலபாடம் … … … …	ச0
ஆறாம் பாலபாடம் … … … … …	ரு0
கலாமஞ்சரி (இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல்லீவிங் சேர்ட்டிவிக்கற்" வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது) … …	ரு0
ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன்	க
நமச்சிவாயமாலை, உரையுடன் … … …	க
வெற்றிவேற்கையுரை … … … …	க
வாக்குண்டாமுரை … … … … …	க
நல்வழியுரை … … … … …	க
நன்னெறியுரை … … … … …	க
இனியவைநாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)	கஉ
இலக்கண வினாவிடை… … … …	க0
நிகண்டு கக-வதும் கஉ-வதும் … … …	உரு
திருவாதவூரடிகள்புராண மூலம் … …	உரு
கிருட்டினன்றூது மூலமுமுரையும் .. …	ரு0
திருச்செந்தூர்ப்புராணவுரை (இசேஸ்காகிதம்) ரூ க-உரு,(நல்காகிதம்)	க-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் …	க0
கந்தசஷ்டி கவசம் … … … … …	க
சுப்பிரமணியசுவாமி விருத்தம் … …	க
ஆறுமுகசுவாமி விருத்தம … … … …	க
கதிரைமலைப் பேரின்பக்காதல் … …	க0
பிள்ளையார்கதை … … … … …	கஉ
பிரபஞ்சப் பெருவழக்கு … … …	க0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? …	க0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) …	க
குமணசரித்திரம் „ … …	க
பஞ்சரத்தினத் திருப்புகழ் … …	க
சோமவாரவிரதமான்மியம் … … …	க0

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை செலவின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

விளம்பரம்.

பேசல்மிசன் ஓடுகள்.

உலகப்பிரசித்தியான இவ் வோடுகள் புதிதாய் தருவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓடுகள் குணங்களை நன்குணர்ந்தவர்களாயுள்ளவர்கள் மற்றைய ஓடுகளிலும் திறமானவையெனக் காணப்பட்டிருக்கின்றன. தட்டோடுகள், முகட்டோடுகள், அரையோடுகள், காற்றோடுகள், தளவரிசைக்கற்கள் முதலியன இப்போது இருப்பிலிருக்கின்றன.

William Mather & Sons,
Agents
Basel Missien,
8 Tile Works.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தானவரவு.

திரிகோணமலை சிவாஜெனி ஸ்ரீ ஆ. ஆழ்வாப்பிள்ளையவர்களின் வருஷாப்தியத்தில் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலசபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா உ பெற்றும்.

சு. இராசரத்தினம்.
தனாதிகாரி.

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்: [illegible] வைகாசிமீ உஅஉ

யாழ்ப்பாணத்துள்ள தொழிலாளரின் நிலைமை.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் பஞ்சம் ஆரம்பித்த காலத்தில் செல்வர் வறியவர் உத்தியோகஸ்தர் கூலித்தொழில் செய்வோர் என்னும் பேதமின்றி எல்லாருங் கஷ்டப்பட்டனர் நாட் செல்லச் செல்ல, சிலவகுப்பினர் அதிக கஷ்டமின்றியும் சிலவகுப்பினர் அதிக கஷ்டமுற்றும் காலம்போக்குவதை அநுபவித்ததாகக் காணலாயினேம். உணவுப்பொருட்கள் சிலகாலத்திற்கு இங்ஙனம் விலையுயர்ந்து நிற்குமென்பதை யுணர்ந்த அரசாங்கத்தினர், தமக்குக் கீழுள்ளவர்களாகிய அரச உத்தியோகத்தர்கட்கு உதவிவந்த வேதனத்தைக் காலத்திற்குக் காலமுயர்த்திவருகின்றனர். உபாத்தியாயர்களாகவுள்ளவர்கட்கும் வேதனத்தை உயர்த்திக்கொடுக்கவேண்டுமென வித்தியாபகுதியார் கேட்க அரசினர் அதற்கு இசைந்து நூற்றுக்குப் பதினைந்து வீதமாக உயர்த்திக்கொடுக்கவிணங்கி சென்ற ஏப்பிறல் மாதத் தொடக்கம் அங்ஙனம் உதவிவருகின்றனர். வருகிற செப்டம்பர் மாசத்திற்குமேல் இவர்கட்கு நூற்றுக்கு முப்பது வீதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்னும் விஷயம் இப்பொழுது யோசிக்கப்படுகின்றது. கமக்காரர்கள் தங்கள் உணவுக்குக்கண்டு எஞ்சியநெல்லை இரக்கமின்றி ஒரு புஷல் நெல் அ ரூபா வரையில் விற்று நன்கு காலங்கழிக்கின்றனர். வியாபாரிமாரெல்லாம், தாம் விக்கிரயஞ்செய்யும் பொருள்கட்கு வைக்கக்கூடிய லாபம் வைத்து விற்று யாதுங் குறைவின்றி வாழ்கின்றனர். இவர்களெல்லோரதும் வாழ்க்கை இங்ஙனமாக, இப்பொழுது உண்மையாக இப்பஞ்சங் காரணமாகக் கஷ்டமுறுகின்றவர்கள் யாரென ஆராயுங்கால் தொழிலாளர்தாமென்பது இலகுவிற் புலனாகும்

இலங்கையிலே மலைவளம் நதிவளம் பொருந்திய கண்டி முதலிய நாடுகளில் தேயத்தோட்டங்களும் றப்பர்த் தோட்டங்களும் அதிகமாக இருத்தலினாலும், இருபோகம் முப்போகம் செய்யக்கூடிய வயல்களிருப்பதினாலும் வன்னி மட்டக்களப்பு திரிகோணமலை முதலிய இடங்களில் நீர் வளம் நிறைந்த வயல்களிருப்பதினாலும் அங்குள்ள தொழிலாளர் சேர்ந்து வேலை செய்து சீவனஞ் செய்வதற்குப் போதிய இடங்களுண்டு. அந்நாடுகளில் வசிக்குந் தொழிலாளர் இலகுவிற் பஞ்சமுறமாட்டார்கள். யாழ்ப்பாணத்தில் வசிக்குந் தொழிலாளருட் சிலர் வேலியடைத்தல் மூடை சுமத்தல் முதலிய கூலிவேலைகள்செய்து வயிறு வளர்க்க, பல்லாயிரக்கணக்கானோர் வருடம் முழுவதும் சுருட்டுவேலை செய்தே சீவனம் பண்ணுகின்றனர். நடந்த பாரியயுத்தத்திற்கு முன்னர் சிற்சில காலங்களில் இவர்கள் வேதன மூயர்ந்துவந்த தன்மையாயினும் யுத்தகாலத்திலும் பெரும் பஞ்சம் நிகழும் இப்பொழுதும் இவர்கள் பெறுங் கூலி உயர்வின்றி ஒரே தன்மையாக இருக்கின்றது. யுத்தகாலத்திலும் யுத்தத்தின் பின்னும் மேலைத்தேசத் தொழிலாளர் ஊர்கடோறும் ஒருங்கு திரண்டு ஐக்கியப்பட்டு, வேலை நிறுத்தஞ் செய்து காலத்திற்குக் காலம் தங்கள் வேதனம் உயருதற்கான வழிகளைத் தேடிக்கொண்டார்கள். இந்தியாவிலுள்ள தொழிலாளரும் அங்ஙனஞ் செய்துவருகின்றார்கள். மேலைத்தேசங்களிலுள்ள தொழிலாளிகள் அவ்வளவில் மாத்திரமமையாது அணைப் பெலனடைந்து இராச்சியபரிபாலனவிஷயத்திலும் பிரவேசித்துத் தங்கட்குச் சௌகரியமான பலதிருத்தங்களைச் செய்யத் தலைப்பட்டுக்கொண்டனர். நமது யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலாளர்கட்கு இராச்சிய பரிபாலனத்தில் இடங்கொடுக்கவேண்டுமென யாம் சொல்லவரவில்லை. இத்தொழிலாளர் மத்தியிற் சென்று இவர்கள் இப்பஞ்சகாலத்திற் சீவனத்தின் பொருட்டுப் படுங் கஷ்டத்தைப் பார்த்தால் அறிவுடையோரெவரும் அனுதாபமுறாமல்முடியாது. சென்ற சில மாசங்களாகச் சுருட்டுக்குரிய புகையிலை இங்கே அரிதாக, இவர்கள் சுருட்டுக் கொட்டகைகளில் மாதத்திலுள்ள முழுநாளும் வேலைபெறாது, மாசத்திலே பத்து நாளும் பதினைந்து நாளுமாகவே வேலைபெறுகின்றனர். இவர்கள் இப்பஞ்சகாலத்தில் இந்த அற்ப வேதனத்தைப் பெற்றுத் தாமும் தங்கள் குடும்பத்தினரும் வயிறு வளர்ப்பதென்றால் முடியுமா? இச்சுருட்டு வேலைத் தலங்களில் ஏழுவயசுச் சிறுவர் தொடக்கம் ஐம்பது அறுபது வயது வரையிற் சென்ற விருத்தர்களும் இருக்கின்றனர். வயசு சென்ற இவர்களுள் அநேகர் ஏழு எட்டு வயதுப் பராயத்திலேயே இந்த வேலையிற் சேர்ந்து இதையே பயின்று வந்தமையினால் இவர்கட்கு வேறு தொழில் செய்து சீவனம் பண்ணுதல் தெரியாது. சுருட்டுவேலை தட்டுப்பட்ட காலங்களில் முன்னரும் இவர்கள் இங்ஙனஞ் சங்கடமுற்றதைச் சகலருமறிவர். இத்தொழில் தட்டுப்படுங் காலங்களில், இவர்கள் சிலகாலத்திற்குப் பொருளின்றி முட்டுப்பாடுண்டாக இவர்களிற் சிலர் களவு முதலிய தீத்தொழில்களையுஞ் செய்யத் தலைப்படுவர். யாழ்ப்பாணத்திலுள்ள அரசபக்தியுள்ள பிரசைகளிற் பெரும்பாலாரான இவர்களது சேமத்தின் பொருட்டு ஆகவேண்டிய வழிகளைச் செய்தல் இலங்கையரசாங்கத்தார் மேற் பொறுத்த கடனாகும். இத்தொழிலாளர்கள் உழைக்கும் பணத்தில் அற்ப பாகத்தையேனுஞ் சேமித்துவைத்து இவர்கள் இப்படிக் கஷ்டமுறுகின்ற காலத்தில் இவர்கட்குப் பயன்படக்கூடிய ஒருமார்க்கத்தை அரசினர் ஏற்படுத்துவிடின் அது பெரும் நன்மையாகும். இவர்கள் கல்வியறிவிற் குறைந்தவர்களாதலினால் தாமாகச் சங்கடகாலத்திற்குப் பொருள் சேர்த்து வைப்பார்களென்ன நாம் ஒருபோதும் நம்பியிருக்க முடியாது. எங்ஙனமாயினும் இத்தொழிலாளர் விசேஷமாக இப்பஞ்சகாலத்தில் அதிக கஷ்டமுறாதபடி ஏதுஞ் சகாயஞ் செய்தல் முறையாகும்.

நீதிபோதம். உஎ.

சோமேசர் முதுமொழி வெண்பா.

தவம்.

ஏர்மணநல் லூர்ச்சுடருள் யாருமணு
கச் சிலர்தாந், தூரநெறி நின்றயர்ந்தார்
சோமேசா—வோரில், தவமுந் தவமுடை
யார்க்காகு மவமதனை, யஃதிலார் மேற்
கொள் வது.

ப-ரை: ஏர்மண நல்லூர்ச் சுடருள் - திருநல்லூர்ப் பெருமணத்தில் எழுந்த சிவசோதியுள், யாரும் அணுக-(விவாக தரிசனத்தின் பொருட்டு வந்தோருள்) பலர் கலந்துவிட, சிலர்தாம்-சிலர் மாத்திரம், தூரநெறி நின்றயர்ந்தார்-(அச்சோதியுட் பிரவேசித்தற்கு அஞ்சி) தூரத்தில் நின்று பின் பச்சாத்தாபங்கொண்டனர், சோமேசா - சோமேசரே, ஓரில்-ஆராயுங்கால், தவமும்-(பயனேயல்லாமல்) தவமுண்டாவதும், தவமுடையார்க்கு ஆகும் - முன்னைத் தவமுடையவர்களுக்கே கைகூடும், (ஆகலால்) அதனை-அத்தவத்தை, அஃது இலார்-முன்னைத் தவமில்லாதவர், மேற்கொள்வது - செய்யத் தொடங்குவது, அவம் - வீணாம் எ-று.

க - ரை: திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது திருமணகாலில், திருநல்லூர்ப்பெருமணம் என்னுந்தலத்திலெழுந்த சிவாக்கினியிற் பலர்புகுந்துவிடச் சிலர் புகாது பின்துன்புற்றனர். ஆதலால் தவமும் பூர்வபுண்ணிய முள்ளவர்க்கே அநுகூலமாகு மென்பதாம்.

திருமணநல்லூர்ச் சோதியின் வரலாறு:

[illegible]ஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது தந்தை[illegible]ராகிய சிவபாதவிருதயரும் மற்றும் பெரியோரும் விரும்பியபடி விவாகஞ்செய்தற்கு உடம்பட்டு, திருநல்லூரிலிருந்த நம்பாண்டார்நம்பி என்பவருடைய புத்திரியை மணஞ்செய்துகொள்ளும் வண்ணம் மணமகனுக்க கோலங்கொண்டு பல்லியமியம்பச் சகலவரிசைகளுடனும் முத்துச்சிவிகையின்மீது இவர்ந்து மணமகளிடலத்திற்கு எழுந்தருளினார். பூம்பந்தருக்கு முன் வந்தவுடனே முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, பூக்களும் பொற்சுண்ணமும் பரந்த பாவாடைமேல் நடந்து, திருக்கல்யாண மண்டபத்துட் சென்று, இரத்தினாசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். அப்பொழுது நம்பாண்டார்நம்பி, தம்முடைய மனைவியார் பசும்பாலுஞ் சந்தனமுங் கலந்த நீர் பின் வரவந்து, பிள்ளையாரைப் பரமசிவனாகப் பாவித்துத் தம்முடைய மனைவியார் கரகநீரை வார்க்க, அவருடைய ஸ்ரீ பாதங்களை விளக்கி, அங்ஙனஞ் செய்த தீர்த்தத்தைத் தம்முடைய சிரசின்மேலே புரோக்ஷித்து, உள்ளும் பூரித்துச் சுற்றத்தார்கள் மேலுந் தெளித்தார். பிள்ளையாருடைய திருக்கரத்திலே ஜலத்தைவார்த்து, தம்முடைய கோத்திரத்தைச் சொல்லி, "என்னுடைய புத்திரியை திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குக் கொடுத்தேன்" என்றார். விவாகமுகூர்த்தம்வர, மணமகளைக் கொண்டுவந்து பிள்ளையாருக்கு வலப்பக்கத்திலே இருத்தினார்கள். திருநீலநக்கநாயனார் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமுன்பே பரமசிவனைத் தியானித்துக்கொண்டு; வேதவிதிப்படி சடங்குசெய்ய,வேதங்கள்ஒலிக்க,திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமங்கலியத்தைச் சாத்தி, பாணிக்கிரகணம் பண்ணி, பொரியை அக்கினியிலிட்டு, பரமசிவனைத் துதித்து, அக்கினியை வலஞ்செய்ய வேண்டி, "அக்கினியாவார் பரமசிவனே" என்று திருவுளங்கொண்டு, திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் செல்லத்தருதி, வேதவிதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியைவலஞ்செய்து 'இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே; நான் இவளோடு சிவபெருமானது திருவடியை அடைவேன்' என்று திருவுளங்கொண்டு, சமஸ்தருஞ்சூழும்படி மனைவியாரோடு சென்று அச்சிவாலயத்திற் பிரவேசித்து, தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடையபாசத்தை நீக்கத்திருவுளங்கொண்டு "திருநல்லூர்ப் பெருமணத்தில் எழுந்தருளியிருக்கும் கடவுளே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது" என்று, "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

அப்பொழுது சருஞ்செநியாகிய சிவபெருமான் "நீயும் உன் மனைவியும் உன்னுடைய விவாகத்தைத் தரிசிக்க வந்தவர்கள் சமஸ்தரும் 'இந்தச் சோதியினுள்ளே வந்து நம்மை அடையுங்கள்'" என்று அருளிச்செய்து, திருக்கோயில் உட்படமேலோங்கிய சுத்த சோதி வடிவமாகி, அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக் காட்டியருளினார். திருபாசமூக்கிரமாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சோதிவடிவாய் நின்ற கடவுளைக் கண்டு துதித்து, உலகம் உய்யும்பொருட்டு அதனை அடையும் நெறியை அருளிச்செய்யத் திருவுளங்கொண்டு, யாவருக்கும் ஞானமெய்ந்நெறி, நமச்சிவாய என்கின்ற மந்திரம் என்னுங் கருத்தையுடைய 'காதலாகிக் கசிந்து' என்னும் நமச்சிவாயத்திருப்பதிகத்தைச் சமஸ்தருங்கேட்க அருளிச் செய்து, 'இக்கலியாணங் காண வந்த எல்லீரும் உங்கள் சனனநோய் நீங்கும்பொருட்டு, இந்தச் சோதியினுள்ளே பிரவேசியுங்கள்' என்று திருவாய்மலர்ந்தருளினார். பிறவிக் கடலிலே கரைகாணாது அழுந்தி அறிவின்றி மயங்குகின்றவர்கள் பிள்ளையாருடைய திருமணத்தைச் சேவிக்கப்பெற்றமையால், அந்தச் சோதியினுள்ளே புகுந்தார்கள். திருநீலநக்கநாயனார் முருகநாயனார் சிவபாதவிருதயர் நம்பாண்டார்நம்பி திருநீலகண்டப்பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் தங்கள் மனைவியரோடும் சுற்றத்தாரோடும் புகுந்தார்கள். பிள்ளையாருடைய முத்துச்சிவிகை முதலியவற்றைத் தாங்கிச் சென்றவர்களும் மற்றைப் பரிசனங்களும் தொழுது புகுந்தார்கள். சைவர், பாசுபதர், மகாவிரதர், காளாமுகர், வாமர், வைரவர்என்கின்ற அறுவகை உட்சமயிகளும் வைதிக சைவர்களும் சைவசித்தாந்திகளும் ஆகிய சமஸ்தரும் அந்தச் சுத்தசோதியினுள்ளே புகுந்த பின் சர்வான்மாக்களையும் உய்விக்கும் பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளிய சைவசித்தாந்தசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு, அந்தச் சோதியை வலஞ்செய்து, அதனுள்ளேபுகுந்து சிவசாயுச்சியம் அடைந்தார். அதன்பின் அந்தச் சோதிமறைந்துவிட, திருப்பெருமணமாகிய திருக்கோயில் தோன்றுதலும், உலகத்திலே பேறில்லாதவர்களெல்லாருங் கவலைகொண்டார்கள். பிள்ளையார் சோதியுட் புகுந்தமையைத் தூரதேசங்கண்டு காணப்பெறாத சரிபிரமேந்திராதிதேவர்களும் முனிவர்களும் கவலை நீங்க எடுத்துத் தோத்திரம்பண்ணினார்கள்.

பெர்சியாவின் நிலை.

"பெர்சியாவின்நிலை பூரணமாகத்தெரியவில்லை. பொல்ஷவிக்ஸ் பெர்சியாவிலுள்ள பிரதான நகராகிய தெகிறினைப் பிடித்துவிட்டனரென அமரிக்க பத்திரிகைகள் கூறுகின்றன. அச்சமாச்சாரம் முழுவதும் பொய்யென்று லண்டன் பத்திரிகைகள் கூறுகின்றன. எங்ஙனமாயினும் பெர்சியாவில் பொல்ஷவிக் கட்சியாரின் கலகம் நிகழ்[illegible]சென்பது பொ[illegible]. பெர்சிய அரசராகிய ஷா-வுக்கும் ஆங்கிலருக்குமிடையே ஆங்கில பெர்சிய உடம்படிக்கை யிருந்தாலும பெர்சியாவிலுள்ளவருட் பெரும்பாலார் ஆங்கிலர்க்குப் பிரதிகூலமாயும்பொல்ஷவிக்கட்சியாருக்கு அனுகூலமாயும் நிற்கின்றன ரென்பது பெர்சியாவிலுள்ள புதினப் பத்திரங்களை நோக்குமிடத்து விளங்குமெனச் சொல்கின்றனர். "ஐறன்" என்னும் பெர்ஷிய பத்திரிகை, பொல்ஷவிக்கட்சியாருடைய கொள்கை தங்கள் சமயநூலாகிய குறானிற் சொல்லப்பட்டவிஷயங்களை ஒத்திருக்கின்றதென்றும், மகமட் போதித்த சில விஷயங்களையே இப்பொழுது பொல்ஷவிக் கட்சியாரும் கைக்கொண்டிருக்கின்றனரென்றுங் கூறுகின்றது. ஆங்கிலபிரான்சிய உடம்படிக்கையே இக்கலகங்கட்கெல்லாங் காரணமென்றும், ஆங்கில சைநியம் வடதிசையில்நிற்பது அபாயத்திற்கேதுவாமென்றும் அப்பத்திரிகை கூறுகின்றதாம். இன்னொரு பத்திரிகை ஆங்கில பெர்ஷியஉடன்படிக்கையினால் ஆங்கிலருக்கே நன்மையன்றிப் பெர்ஷியருக்கு நன்மையில்லையென்றும் இவ்வுடம்படிக்கை ஆங்கில ஆப்கானிய உடம்படிக்கைபோல் முடியுமென்றும் கூறுகின்றதாம். தபிரிஸிலிருந்துவருஞ் சமாச்சாரங்கள் பொல்ஷவிக்ஸ் அங்கில சைநியத்தைப் பெர்ஷியாவினின்று ஓட்ட முயல்கின்றனரென அறியக்கிடக்கின்றது. டெனிக்கனுடைய சைநியத்தை நிராயுதராக்க அவர்களைத் தடைப்படுத்தியமையினாலேயே பொல்ஷவிக்ஸ் பெர்ஷியாவில் ஒன்றுஞ்செய்ய முடியாமல் நிற்கின்றனரென இன்னொரு சமாசாரங் கூறுகின்றது. ஆனால் பொல்ஷவிக்ஸ் செங்காட்களாக திருன்ஸ்காக்கேசியன் மலைப்பகுதியில் நிற்பதாகத் தெரியவருகின்றது. அங்கில சைநியம்பெர்ஷியாவில்நிற்பதினாலேயே பெர்ஷியர் தங்கள் பொருளுக்குஞ் சேமத்திற்கும் யாதும் பங்கமின்றியிருக்கினறனரெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். பார்ஷியநாட்டில் பார்லிமென்றுபோன்ற அரசியற்சபைகளில்லையென்றும், தக்க சைநியபெலமில்லையென்றும் இவற்றைச் சீர்ப்படுத்திப் பெர்ஷியாவைப் பலப்படுத்த வேண்டியது அங்கில அரசாங்கத்தார்மேற் பாரமென்றும், அங்ஙனஞ் செய்தாற்றான் பெர்ஷியர் யாதுஞ் சத்துருபயமின்றித் தன்னிஷ்டமாக அரசியல் நடத்த முடியுமென்றும் இராசதந்திரிகள் சிலர் அபிப்பிராயமுறுகின்றனர்.

[குறிப்பு:—பர்சியாஆசியாக்கண்டத்தில் அபிரேனியாவென்றும். பெரும் பிரிவைச் சேர்ந்த நடெளிவொன்று இது தமிழில் பாரசியம் எனப்படும். இதன்விஸ்தாரம் 628000 சதுரமைல் சனத்தொகை 9500000 தலைகள் இவர்கள் சமயம் ஸ்லாம்மதத்தின் ஒருசார்ராயுள்ளது. இதனை ஆளும் அரசன் ஷாஎனப்படுவர் இவருக்குத் தன்னிஷ்டப்படி ஆளும் தத்துவமுண்டு. இதன் அயல்நாடுகள் அவ்கானிஸ்தான் பெலுக்கிஸ்தான் என்பன. இப்பொழுது பரிபாலனஞ்செய்யுஞ் ஷா அரசர், துருக்கர் முதலிய ஸ்லாம் இராச்சியத்தாருடைய சார்பின்றி ஆங்கிலருடனேயே பெரும் நட்புபூண்டுள்ளவர்.]

கையோப்பநேயர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

இவ்விந்துசாதன ஆபீசைச்சேர்ந்த ஸ்ரீ. எஸ். ஏ. நாதன் அவர்கள் இலங்கையிலுள்ள நமது கையோப்பக்காரரின் பாக்கிப் பணத்தை அறவிடுவதற்குத் தத்துவங் கொடுக்கப்பட்டு இப்போது ஊருக்கூர் சென்று பணம் அறவிடத் தொடங்கியிருக்கின்றனர். நமது கையோப்பநேயர்கள் தங்கள் பாக்கிப்பணத்தை அவரிடங் கொடுத்து இடைப்பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களை மிக்க விநயத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேம். சரியான பற்றுச்சீட்டுப் பின் அனுப்பப்படும். சரியான பற்றுச்சீட்டு அனுப்பப்படாவிடில் பணங் கொடுத்தவர்கள் நமக்கு எழுதிச் சரியான பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ச. சிவகுருநாதன்,
இந்துசாதன மானேசர்.

சமாசாரம்.

கொலை—வட்டுக்கோட்டையில் இருபகுதியார் ஏதோ பழம்பகை காரணமாகச் சண்டையிட்டபோது ஒருவன் கத்தியினாற் குத்தப்பட்டு இறந்துபோயினனாம்.

யாழ்ப்பாணம் சரஸ்வதிவிலாசசபை:—இச்சபையார் வருகிற சனிக்கிழமை இராமாயணம் அயோத்தியாகாண்ட (பாதுகாபட்டாபிஷேக)த்தை, யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள றிஜ்லே மண்டபத்தில் நாடகமாக நடாத்த நிச்சயித்தனர்.

கும்பாபிஷேகம்:—மிகப் புராதனமாயுள்ளதும சிதிலமடைந்து கிடந்ததுமாகிய கோவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் கோயில் இப்போது புதுக்குவிக்கப்பெற்று நிகழும் ரௌத்திரி ஸு வைகாசி மீ கஉ வெள்ளிக்கிழமை சூரியோதயத்தில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் வெகுசிறப்பாய் நடத்தப்பெற்றது. அடுத்த நாட்களில் அலங்காரத் திருவிழாவுநடைபெற்றது. பலவிடங்களிலுமிருந்து பலரும் வந்து சுவாமிதரிசனஞ்செய்து சென்றார்கள். கடித.

சீனி—சீனி நாள்தோறும் விலையேறிக்கொண்டு வருகின்றது. ருத்தலொன்று 16 சதம் வரையில் விற்ற சீனி இப்பொழுது 56 சதமாக விலைப்படுகின்றது. சீனி உபயோகிப்போர் அதிகமாதலாலும், சீனி வரவு குறைந்தமையாலுமே இந்நிலைமையாயிற்றென்பது வெளிப்படை. கல்லுவெட்டித்துறையில் சிலகாலம் நடைபெற்றுவந்த சீனிக்கம்பனிவாயிலாக இலங்கைக்குப் போதிய சீனி கிடைக்குமென்ற எண்ணம் அக்கொம்பனி முடிந்தவுடன் நீங்கி விட்டது. அச்சீனிக்கம்பனி இல்லாமற்போனதற்கு விசேடகாரணம் சீனிசெய்தற்காகிய பொருட்களில்லாமையே. இப்பொழுது பம்பாயிலுள்ள தாதா கம்பனியார் இலங்கையில் நிலம் வாங்கி கரும்பு பயிரிட்டு விருத்தியாக்கிச் சீனி செய்ய நோக்கம் கொண்டிருக்கின்றனரென அறிகின்றேம். அங்ஙனம் நிகழுமாகில் சீனி இப்படி விலையேறமாட்டாதென நினைக்கின்றேம்.

சைவப்பிரசங்கம்:—மண்டைதீவு செந்தமிழ்ப்பிரகாசவித்தியாசாலையில் சென்ற 20உ புதன்கிழமை, பண்டிதர் ஸ்ரீ. மயில்வாகனம்பிள்ளை அவர்களால், ''சைவசமயமகிமை'' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக்கொண்டு சிறந்த ஓர் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அவ்வுபந்நியாசத்தைக் கேட்டோர் அனைவரும் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தினர். சிறுவர்களும், சிறுமிகளும், பள்ளிக்கூட மங்கலவாழ்த்துப் பாடிய பின்னர், தேவாரதிருவாசகமென்னும் அருட்பாக்களைப் பண்ணோடு ஓதினர். அதில் சிறுமிகள் ஓதியது கர்ணாமிர்தமாக யாவருடைய சிந்தையையும் நெகிழ்ப்பண்ணியது. மண்டைதீவிலுள்ள சிவநேசச் செல்வர்கள் அனைவரும் ஐக்கியப்பட்டு இத்தகைய உபந்நியாசங்களை மாதம் ஒரு முறையாவது வைத்து நடாத்தி வருவார்களாயின், ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளை மிஷன்பாடசாலைக்குவிடாமல் இவ் வித்தியாசாலைக்கே விடுவதற்கு ஏதுவாயிருக்கும். கடித.

அரசர் ஜனனதினக் கொண்டாட்டம்:—இத்தினக் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கல்லூரிகளிலும் ஆங்கில கலாசாலைகளிலும் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் குறித்த தினத்தன்று பகல் பிள்ளைகளும் ஆசிரியர்களும் கல்லூரியிற்கூடினர். ஆசிரியர்கள் பிள்ளைகட்கு இராசபத்தியைக் குறித்து உபந்நியாசங்கள் செய்தனர். பின்னர் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன. பின்பகல் இரண்டு மணி வரையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பவனியாக முற்றவெளிக்குச் சென்றனர். முற்றவெளியில் யாழ்ப்பாணம் ஏசண்டர் மெஸ்கொன்ஸ்றன்ரயினவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளிற் கற்கும் பிள்ளைகளுள் விளையாட்டிற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட பிள்ளைகள் கலந்து விளையாடினர். அவர்களுள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப்பிள்ளைகளே முதலாகவும், மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிள்ளைகள் இரண்டாவதாகவும் ஜயமடைந்தனர். விளையாட்டில் விசேஷமாக வெற்றிபெறும் கல்லூரிக்கென நியமிக்கப்பட்ட வெள்ளிக்கிண்ணமும் மற்றும் பரிசுகளும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்க்கே விசேடமாகக் கொடுக்கப்பட்டன.

ஒரு ஐரோப்பியன் ஒருமாதச் சிறைவிதிக்கப்பெற்றமை:—ஜோன்டெயிலர் என்னும் ஒரு ஐரோப்பியன் தலைமன்னாரிலிருந்து றாகம என்னுமிடத்திற்குப் புகையிரத ''டிக்கற்'' இன்றிப் பிரயாணஞ் செய்தானென்னும் குற்றச்சாட்டின் பேரில் கொழும்புப் பொலிஸ்கோட்டாரால் 20 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றான். அத்தினமே அவன் புகைவண்டியிற் பிரயாணஞ்செய்த பிலிப்ஸ் எனபவருடைய கெடியாரத்தைத் திருடியதன்பொருட்டு ஒருமாசச்சிறையும் விதிக்கப்பெற்றான்.

இலங்கையுடன் ஜர்மனியர் வியாபாரத்தைப் புதுப்பித்தல்:—யுத்தத்திற்கு முன்னர் ஜர்மனியிற் செய்யப்பட்ட பொருட்கள் இங்கு இறக்குமதியாகி விலைப்பட்டதுமன்றி, இலங்கையிலிருந்து கொப்பறா றப்பர் முதலியனவும் ஜர்மனிக்கு விசேஷமாக அங்குள்ள ஹாம்பர்க என்னுமிடத்திற்கு ஏற்றுமதியாகி வந்தன. யுத்தந் தொடங்கியபின் தடைபட்டிருந்த இவ்வியாபாரம் இப்பொழுது புதுப்பிக்கப்பட்டதென அறிகின்றேம். சில தினங்கட்கு முன் கொழும்புத் துறைமுகத்திலிருந்து இரு கப்பல்களுள் ஒன்று 8000 அந்தர் கொப்பறாவும், மற்றது 18,000றாத்தல் றப்பருமேற்றிச்சென்றனர்.

பொருட்களைப்பற்றியகுறிப்பு.

''அமிர்த சஞ்சீவி சர்பத்து''—இது வண்ணார்பண்ணை பெரியகடைத்தெரு ஆயுள்வேத ஔஷதாலயத்துச் சொந்தக்காரரால் ஆயுள்வேத முறைப்படி, நன்னாரிக்கிழங்கு, சீந்தில், பறங்கிக்கிழங்கு, ரோசாப்பூ முதலிய குளிர்மையான மூலிகைகள் சேர்த்துச்செய்யப்படுவது. இதில் எமக்கு உதவிய போத்தல் சர்பத்தை நாம் உபயோகித்தபொழுது வயிற்றுப்புகைச்சல் முதலிய குணங்களை நீக்கி உடம்பிற்கு அதிக குளிர்ச்சியைத் தருவதை அனுபவசித்தமாகக் கண்டேம். இது தாகமுண்டான காலத்தில் சாமானியசர்பத்தைப்போல நீர்கலந்து உபயோகிக்கவுந் தகுந்ததாகும். இதன் குணாதிசயங்களையும் மற்றும் விபரங்களையும் இப்பத்திரத்தில் வெளிவரும் மேற்படி ஔஷதாலயவிளம்பரத்திற் கண்டுகொள்க.

கல்நார்த் தந்தசூரணம்:—இதுவும் மேற்படியாரால் செய்யப்பட்டது. முரசுகரைதல் வாய்நாற்றம் முதலியனவற்றை நீக்கிப் பற்களைக் கெட்டிப்படுத்துங்குணமுள்ளது. எமக்குதவியசூரணத்தின்பொருட்டு நன்றியறிதல் கூறுகின்றேம். இதன் விபரத்தையும் இப்பத்திரிகையிலுள்ள விளம்பரத்திற் கண்டுகொள்க.

தந்திச் சமாசாரம்.

இங்கிலாந்தில் வெள்ளப்பிரவாகம்.

லௌத் என்னுமிடத்தில் வெள்ளத்திலமிழ்ந்திய வீடுகள் 50 வரையிலிருக்கும். ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் சேதமுற்றன. 27 பிரேதங்கள் நீரிலமிழ்ந்தி யெடுக்கப்பட்டன. இன்னும் பலரைக் காணவில்லை. 2,50,000 பவுண் வரையிற் சேதமுண்டெனச் சொல்லப்படுகின்றது.

அயர்லாந்துக் கலகம்.

ஜூன் மீ 1உ.

வருமானமறவிடப்படும் ஆபீசைக் கலகக்காரர் தாக்கிய காலந்தொடக்கம் அது சைனியங்களால் காக்கப்படலாயிற்று. இன்று கலகக்காரர் 30 பேர் ஆயுதபாணிகளாய்ச் சைனியங்களைத் தாக்கி சில மோட்டர் வண்டிகளையும் யந்திரத்துப்பாக்கிகளையும், 10 தோட்டாக்களையும், 2 சிறுத் துப்பாக்கிகளையும், உருக்குத் தொப்பிகளையும் போர்வீரர்களிடமிருந்து பிடுங்கிச் சென்றனர். (பிந்திய சமாசாரம்) கலகக்காரர்தொகை 100 பேர்வரையிலிருக்குமாம். 500முறை சுடக்கூடிய போதிய வெடிமருந்தைக் கைப்பற்றினர். காத்து நின்றவர் இராணுவ உத்தியோகஸ்தர்களும் 9 பேர்வீரர்களுமாம். அயர்லாந்தின் தென்பாகத்திலுள்ள பேர்லன்ட்டுவில் இராணுவத்திற்குரிய ஒரு பிரதானமான கட்டடம் எரிக்கப்பட்டது. இங்கு யுத்தப் பொருள்கள் பல சாம்பராயின. சேதம்போன யுத்த பொருட்கள் 100 ருத்தல் வரையிலிருக்குமென மதிப்பிடப்படுகின்றது.

ஜூன் மீ 2உ.

கில்கவுன்றி என்னுமிடத்தில் கலகக்காரர் பொலிஸ்பகுதியாரிருக்குமிடங்களைத் தாக்கினர். தெருக்களுக்குக் குறுக்கே மரங்களையிட்டு, புகைரதப்பாதைகளையும் அழித்தனர். இவ்விடங்கட்குப் பொலிசரும் போர்வீரர்களும் அனுப்பப்பட்டனர்.

ஆர்மீனியா.

பொல்ஷவிக்கட்சியார் ஆர்மீனிய எல்லையைத் தாண்டி உட்புகுந்துவிட்டனர். ஒருவாரத்திற்கு முந்தி அன்ஸிலி என்னும் பேர்சிய துறைமுகத்தையும் பொல்ஷவிக்ஸ் பிடித்தனர். ஆங்குநின்ற ஆங்கிலசைனியம் பின்வாங்கிவிட்டது. இப்பொழுது இருஷிய குதிரைப்பட்டாளம் ஆர்மீனியாவுட் புகுந்துவிட்டது. ஆர்மீனியருடைய சுயாதீனத்திற்குப் பங்கம்வரக்கூடுமென அஞ்சப்படுகின்றது. இந்த ஆர்மீனியா நெடுங்காலம் துருக்கியர் கைப்பட்டிருந்து இப்பொழுது சில மாசங்களாகத்தான் சுயாதீனமுற்றது.

போல்ஷவிக்கட்சியாரின் தோல்வி.

பொலண்டிற் [illegible] தாமாகவே சென்று பொல்ஷவிக் கட்சியாரைத்தாக்கி அவர்களை [illegible] செய்கின்றனர். கெயிவ் நகருக்கு 50 மைல் அப்பால் பொல்ஷவிக்ஸ் துரத்தப்பட்டனர். பிறிஸ்பெத் லீஸ்றர் என்னுமிடத்திற்கிடையே பொல்ஷவிக்ஸ் கட்சியாரைப் போலண்ட் சனங்கள் தாக்குகின்றனர். முன்னேறிச்சென்ற போலண்ட்சனங்கள் துரத்தப்பட்டாலும் அதனால் அதிக தீமையில்லையாம். பொல்ஷவிக்ஸ் கெயிவ் என்னுமிடத்தைத் திரும்பிப் பிடிக்க முடியாமற்போனதுமன்றி கடுஞ்சமர்புரிந்து நீப்பர் நதியையும் விட்டகன்றனர்.

அரச சக்கரவர்த்தியின் ஜனனதினக் கொண்டாட்ட நந்நாள் பிறெசிடன்வில்சன் அனுப்பிய தந்தி நிருபம்:—''உமது ஜனனக் கொண்டாட்டம் எமக்கிடையேயுள்ள நட்பைப் பெலப்படுத்தி எங்கள் மேல்நோக்கங்களை நிறைவேறச் செய்யுமென நான் எண்ணுகின்றேன்.''

அதற்கு அரசசக்கரவர்த்தியின் பதில்.

''நாங்கள் ஆரம்பத்திற் சேர்ந்துகொண்டபடி, தற்காலநிலைமை நன்னிலைக்குக் கொண்டுவருதற்கு இவ்விருசாதியினரும் இன்னும் ஐக்கியப்பட்டு உழைப்பரென யான் நம்பிக்கையுற்றுளேன்.''

அமரிக்கருக்குரிய பாரிய யுத்தக்கப்பல்.

டெனிசீ யென்பதே அமரிக்கருக்குரிய யுத்தக் கப்பல்கள் யாவற்றிலும் பெரியது. இதன் பெறுமதி காற்பதுலக்ஷம் பவுண். இது 32500 தொன் நிறையுள்ள பொருட்களை ஏற்றிச்செல்லும். 14 அங்குல வாய்கொண்ட 12 துப்பாக்கிகள் ஏற்றப்பட்டுள்ளன.

அயர்லாந்துக்கலகம்.

ஜூன் மீ 4உ.

கலகக்காரர் டபிளினுக்கணித்தாக ஒருபுகைவண்டியைத் தாக்கி புடைத்து புகைரதப்பாதையையுஞ் சேதப்படுத்தினர். புகைரதவண்டியிலிருந்தவர்களொருவருக்கு காயமுறவில்லை. இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் 8 பொலிசரும் இக் கலகத்தை அடக்கும்படி அனுப்பப்பட்டனர் ஒரு கோட்டுவீட்டிற்கு நெருப்புவைத்துவிட்டனர் கலககாரரிற்சிலர் சிறைப்படுத்தப்பட்டனர். ஒரு பொலிஸ்உத்தியோகத்தன் மாத்திரம் காயமடைந்தான்.

கடிதம்.

மங்கையர்க்கரசியார் சரித்திரம்.

கூன்பாண்டியன் என்னும் அரசன், தனது வல்லமையினாலே, சோளன் சோழன் என்னும் அரசனை வென்று, அவர்கள் நாடுகளையுங் கைக்கொண்டு அரசபுரியும் நாளிலே, சேரராசன், இரத்தினமும் பொன்னும் கொண்டுவந்து கொடுத்துத் தன்னுடைய நாட்டைப் பெற்றுக்கொண்டு போனான். சோழராசனும் தன்னுடைய புதல்வியாகிய மங்கையர்க்கரசியாரை விவாகஞ்செய்து கொடுத்துத் தன்னுட்டைப் பெற்றுக்கொண்டான். சோழராசன் அம்மங்கையர்க்கரசியாருக்கு அளவற்ற திரவியத்தையும் தாதிகளையும் கொடுத்துக் குலச்சிறை என்பவரையுங் கூட அனுப்பினான். அக்குலச்சிறையாருடைய கல்வித்திறமையைப் பாண்டியராசன் கண்டு அவரைத் தனக்கு மந்திரியாக்கிக்கொண்டான். கூன்பாண்டியன் முன்செய்த தீவினையினாலே சமணர்களிடம் அகப்பட்டு ஆருகதனானான். அரசன் ஆருகதனானதால், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாருந் தவிர, அந்நாடு முழுதிலும் ஆருகதமாகிய இருள்மூடிற்று. ஒருநாள் இவ்விருவரும் சமணசமயத்தையொட்டிச் சைவசமயம் தழைத்தோங்கச்செய்பவர் யாரோவென்று கவலையுற்றுக் கோயிலுக்குச் சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கி ''சனகர் முதலாகிய முனிவர்களுக்கு வேதத்தின்பொருளை யருளிச்செய்த கடவுளே, சமணர்களுடைய வலையிலகப்பட்டு அறிவிழந்த அரசனைக் காப்பாற்றியருளும்'' என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது சீர்காழியிலிருந்து ஒரு பிராமணர் சோமசுந்தரக்கடவுளை வணங்கும் பொருட்டு அங்கே வந்தார். அவ்விருவரும் அப்பிராமணரை நோக்கி ''நீர் எங்கிருப்பவர்'' என்றார்கள். அவர் ''நான் சீர்காழியில் உள்ளவன்'' என்றார். ''அங்கேயுள்ள விசேஷங்களென்ன'' வென்று அவர்கள் வினவப், பிராமணர் ''சீர்காழியிலே சிவபாதவிருதய ரென்னும் ஒரு பிராமணர் உளர்; அவர் 'சைவசமயந் தழைத்தோங்கும் பொருட்டு, ஒருபுதல்வனைத் தரவேண்டு' மென்று தோணியப்பரை நினைந்து தவஞ்செய்தார். சிவனருளினாலே அவருக்கு ஒருகுழந்தை உதித்தது. அக்குழந்தைக்கு மூன்றாம் வயதிலே உமாதேவியார் சிவபெருமானுடன் எழுந்தருளிவந்து தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து ஊட்டினார்; உடனே அக்குழந்தை வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களையும் உணர்ந்து, திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் பெயரையும் பெற்றது; குழந்தைப் பருவத்தையுடைய அத்திருஞானசம்பந்தமூர்த்தி சிவபெருமானிடத்திலே, முத்துப்பல்லக்கும் முத்துச்சின்னமும் முத்துப்பந்தரும் பெற்றுப் பாலைநிலத்தை நெய்தனிலமாகவும், வேதாரணியத்திலே திருக்கதவு அடைக்கவும் பாடிச் சிவஸ்தல யாத்திரை செய்கின்றார்'' என்றார். அது கேட்ட மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கு ஒரு ஓலையெழுதி அந்தப் பிராமணரிடம் கொடுத்து அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போனார்கள். பிராமணர் திருஞானசம்பந்தசுவாமிகளிடம் சென்று, அவ்வோலையைக் கொடுத்தார். இவ்வோலையைக் கண்டவுடன் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் மதுரைக்குப் புறப்பட்டார். இதையறிந்த திருநாவுக்கரசுநாயனார் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை நோக்கி ''நீரோ சிறியவர்; சமணரோ பாதகத்துக்கஞ்சாதவர்கள்; ஆதலால் அங்கே போதல் கூடாது'' என்று சொல்லித் தடுத்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ''சிவபெருமான் நம்முடைய சிந்தையிற் கோயில் கொண்டுவீற்றிருப்பாராகில் அவர்களால் நமக்கு ஒரு தீங்கும் உண்டாகாது'' என்று சொல்லிப் புறப்பட்டார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முத்துச்சிவிகையின் மேலேறிச் சென்று மதுரையையடைந்தார். முத்துச் சின்னத்தின் ஓசையைக் கேட்டுச் சமணர்கள் வந்து 'உங்கள் [illegible] வணங்க வந்த நமக்கு இந்த வெற்றிச் சின்னம் ஏனோ? நீங்கள் யாவரோ வென்றீர்கள்?'' என்று தடுத்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அந்நடையைக் கடந்து, கோயிலையடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கிச் சமணர்களை வாதில்வெல்லச் சுவாமியுடைய திருவடிகளை வணங்கித் திருப்பதிகம் பாடித் திருவருள் பெற்றுக்கொண்டு வெளியே வந்தார். அப்பொழுது வாகீசரென்னும் சிவனடியாரொருவர் வந்து அவரைத் தம்முடைய திருமடத்திற்கு வரும்படி வேண்டிக்கொண்டார். நாயனாரும் அதற்கிசைந்தார்.

நாயனார் வரவையறிந்த சமணர்கள் பொறாமை கொண்டு நாயனாரிருக்கும் மடத்தை யெரிக்கும் பொருட்டு மந்திரஞ் செபித்தார்கள். அக்கினி புகைவதைக் கண்ட சனங்கள் போய் நாயனாருக்குச் சொல்ல, நாயனார் இது பாண்டியனாற் செய்யப்பட்டதென் றறிந்து கடவுளுடைய திருவடிகளை வணங்கித் திருப்பதிகம் பாடினார். உடனே அரசனுக்கு வெப்புநோ யுண்டாகி வருத்தியது. அரசனுக்கு வெப்புநோயுண்டானதை யறிந்த மங்கையர்க்கரசியும் குலச்சிறையாரும் வைத்தியரையழைத்து மருந்துசெய்தும், அது தீராமைகண்டு வருத்தமுற்றார்கள். பொழுது விடிந்தவுடன் மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் அரசனிடம் சென்று ''இந்நோய் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலன்றி மற்றவர்களால் தீராது'' என்றார்கள். அரசன் ''அவரை இங்கே யழையுங்கள்'' என்று சொல்ல, குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரிருக்கும் மடத்தை யடைந்து நாயனாரை வணங்கி 'சுவாமி, சமணசமயத்திற்சென்ற நமது அரசன் வெப்பு நோயால் வருந்துகின்றார். சமணர்கள் எல்லோரும் தங்களால் மாற்றவியலாதென்று சொல்லிக் கைவிட்டார்கள். ஆதலால் உம்முடைய திருவருளினாலே எங்களரசன் சுகந்தீர வேண்டும்'' என்றனர். நாயனார் அதற்கு உடன்பட்டு முத்துச்சிவிகையின் மேலேறிச் சென்று அரண்மனையை யடைந்து அரசனுக்குச் சமீபத்திலுள்ள இரத்தினாசனத்திலிருந்தார். அரசன் அவரைப் பார்த்து ''அடியேனுக்குண்டான இந்நோயைத் தீர்த்து, அடியேனையும் காப்பாற்றியருளும்'' என்று வேண்டினான். அது கேட்ட சமணர்கள் பொறாமைகொண்டு ''மகாராசாவே, உமதுடைய வலப்புறத்து நோயை இவரும், இடப்புறத்து நோயை நாங்களும் மாற்ற உத்தரவிட வேண்டும்'' என்றார்கள். அரசனும் அதற்கிசைந்தான். சமணர்கள் அரசனுடைய இடப்புறத்தை மயிற்பீலியினாலே தடவினார்கள். அதனால் வெப்புநோயதிகரித்தது. அப்பொழுது திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநீற்றை யெடுத்தார். அது கண்ட சமணர்கள் ''இது மாயநீறு'' என்று தடுத்தார்கள். நாயனார் அதனை விடுத்துக் கோயிற் திருநீறு கொண்டுவரும்படி செய்து அதை அரசனுடைய மேனியிலே பூசினார். உடனே வலப்புறத்து நோய் நீங்கிற்று. அரசன் நாயனாரை நோக்கி ''தேவரீர், தாங்களே மற்றப்பக்கத்து நோயையுந் தீர்த்தல்வேண்டும்''என்றான். அவர் முன்போலவே விபூதியைத் தடவினார். பாண்டியன் வெப்புநோயும் கூனும் நீங்கப்பெற்றுச் சூரியனைப்போல் பிரகாசித்தான். இதனாலே கூன்பாண்டியனுக்குச் சௌந்தர பாண்டியனென்னும் பெயருண்டாயிற்று. சௌந்தரபாண்டியன் சமணசமயத்தை விடுத்துச் சைவசமயத்தையடைந்து சுத்தனாயிருந்தான்.

பின்னர், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் அவரை வணங்கி ''சுவாமீ, அரசனுடைய நோயையும் கூனையும் நீக்கி, விபூதியும் அணிவித்தீர்; இனிச் சமணர்களை வென்று, இத்தென்னாடு முழுவதும் சைவசமயமே தழைத்தோங்கச்செய்தல்வேண்டும்'' என்றிரந்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் பின்தொடரத் திருக்கோயிலையடைந்து ஸ்நானஞ்செய்து சோமசுந்தரக்கடவுளை வணங்கிச் சமணர்களை வெல்லத் திருவுளஞ் செய்தருளுமென்று பிரார்த்தித்தார். அப்பொழுது ''அன்பர்களே, உங்கட்கிசைந்ததே எமக்குஞ் சம்மதம். ஆதலால் நீரே வெல்லத்தக்கவர்'' என்ற ஒரு அசரீரி வாக்குண்டாயிற்று. அதுகேட்ட நாயனார் கடவுளை வணங்கித் திருமடத்திற்குச் சென்றார். மறுநாட்காலை மங்கையர்க்கரசியாரும் அமைச்சனாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை வணங்கி அழைத்துக்கொண்டுபோய், அரசனை நோக்கி ''மகாராசாவே சமண சமயத்தை நீக்கினாற்றான் சைவசமயந் தழைத்தோங்கும்'' என்றார்கள். அரசனும் அதற்கிசைந்தான். நாயனார் பல அற்புதங்களைச் செய்தும் சமயவாதஞ்செய்தும் சமணரை வென்று சைவத்தை ஓங்கச்செய்து பாண்டிநாட்டைவிட்டு நீங்குதலும் பாண்டியராசனும்,தேவியாரும்,குலச்சிறையாரும் நாயனார்மீதிருந்த அன்பினாலே அவரைத் தொடர, நாயனார் அவர்களை நோக்கி ''அன்பர்களே, நம்மிடத்துள்ள அன்பு நீங்காதவராய் இங்கிருப்பீர்களாக'' என்று தடுத்தார். அவர் மூவரும் நாயனார் வார்த்தையை மறுப்பதற்கஞ்சி அவரை வணங்கி, மதுரையையடைந்து சோமசுந்தரக்கடவுளை வணங்கிக்கொண்டு சைவசமயவிருத்திசெய்து இனிது வாழ்வாராயினர்.

குறிப்பு:—ஆருகமதத்தை அநுசரித்த தமது நாயகனையும் பிரஜைகளையும் அம்மதத்தை விடுத்துச் சைவத்திற் பிரவேசிக்கச்செய்தமையினாலே மங்கையர்க்கரசியாரின் சுயாபிமானமும் திருஞானசம்பந்தர் குலச்சிறையார் என்னுமிருவர் மீதும் பாராட்டிவந்த அன்பினால் அம்மங்கையர்க்கரசியாரின் அடியார்பத்தியும், வேண்டிய காலங்களில் சோமசுந்தரப் பெருமான் அசரீரியாகத் திருவாய்மலர்ந்தருளி அம்மையார் மனக்கவலைகளை நீக்கியருளியமையினால் அவ்வம்மையாரின் சிவபக்தியின் மாண்பும், தமது நாயகன் அந்நிய சமயத்தனாயிருந்த காலத்தும் அவன் மனவருத்தாது இசைய நடந்து பின்னரும் அவன் விருப்பத்தின்படி சைவத்தை அநுசரிக்கச் செய்தமையினால் அவரது கற்பின் திறமையும் நன்கு விளங்குகின்றன.

இங்ஙனம்
க. நவரத்தினம்மாள்,
வண்ணார்பண்ணை.

ஏழாம்வேற்றுமையும் காலப்பொருளும்.

ஏழாம் வேற்றுமைக்கு இடப் பொருளன்றிக் காலப்பொருளென ஒன்றின்று. அது, "ஏழாகுவதே கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி வினைசெயிடத்தி னிலத்திற்காலத்தி, னனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்துக்கு, "கண்ணென, அது வினைசெய நிற்றலாகிய இடத்தின் கண்ணும், நிலமாகிய இடத்தின்கண்ணும், காலமாகிய இடத்தின்கண்ணும் தோன்றும் எ-று. எனவே ஏழாவது இடப்பொருண்மைத்தென்றவாறும்" எனச் சேனாவரையர் உரைகூறுமாற்றானும்,

"ஏழனுருபு கண்ணாதியாகும் பொருண்முதலாறு மோரிரு கிழமையி னிடனாய்நிற்ற லிதன் பொருளென்ப" என நன்னூலார் கூறுமாற்றானுந் தெற்றெனப்படும். அங்ஙனமாக அதனை உணராதாரொருவர் ஏழாம் வேற்றுமைக்குக் காலம்பொருளென ஒன்றுண்டெனக்கொண்டு ஆறுமுக நாவலரவர்கள் நன்னூலினும் இலக்கணச்சுருக்கத்தினும் ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளுணர்கின்ற அன்று, இன்று முதலிய சொற்களை எனக் கூறினரெனவும், அன்று இன்று முதலிய சொற்கள் காலப்பொருளுணர நிற்பன சிற்றிலக்கணங் கற்ற சிறுவருமறிவரே யெனவும் உரைத்தனர். அவர் தம்முணராமையை ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள்மேலேற்றி இதனை யுணரும் மதுகை யிலராயினரே எனவுங் கூறி, அதனைப் பிழைகள் காண்பார் கூற்றாகவுங் கொள்ள வைத்து, பின்னும் அதனை எழுத்துப்பிழைகள் போலவுங்காண்பித்து, அச்சுப்பாதிரியாரவர்கள் பிழைகளையும் எழுத்துப்பிழைகளென மறைக்கப் பாடுபட்டு, ஈற்றில் "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப், பேதைவினைமேற்கொளின்" என்றவாறுய்த் தாமே பிழைத்து அவலமுற்றனர். ஐயையோ! பெரும் பரிதாபம்! அவர் மகாலிங்க சிவமூர்த்தியைக் கண்ணமூர்த்தி வழிபட்டாற்போலத் தாமும் மகாலிங்க சிவமூர்த்தியை வழிபட்டாகுதல் இதனைப் பிழையற எழுதும் வரம்பெறலாமே? அவர் அன்று இன்றமுதலியன காலப்பொருளுணர நிற்பன சிறுவருமறிவரே என்பதை அன்று இன்று முதலியன இடப்பொருளுணர நிற்பன சிறுவரு மறிவரே யெனத் தமக்கே கொண்டுகொள்க. அங்கு இங்கு முதலியன இடமிடமாக வந்ததென்றும், அன்று இன்று முதலியன காலம் இடமாக வந்ததென்றும் அறியாது பிழைத்தமைக்காக அவர் தம்மைத் தாமே நோவாராக. இவ்வெளிப்படைப்பொருளை உணராதாரை நுணுகி யறிவரென்ப தெவ்வாறோ? தம்பிழைகளைக் காண வல்லரல்லாதார் பிறர் பிழைகளைக் காண வல்லராதல் எப்படி? பாதிரியார் தம் பிழைகளை எழுத்துப்பிழைகள் என மறைத்ததும் பொய்யாயிற்றே! இன்னும் யாம் பாதிரியாரவர்கள்விஷயத்தை எடுத்து மூன்றுபக்கங்களில் கண்டித்து வினைபலற்றை விரிவஞ்சி விடுத்திருப்பவும், விஷயத்தைத்தண்டியாது எழுத்துப்பிழைக் குப்பைகளை யெடுத்துக் கூறினர்" எனகடிப்பது பாதிரியாரவர்கள்தம்மைத் தப்புவிக்கும் நோக்கம்போலும். அவர் எப்படி மறைத்தாலும் அறிஞரறிவரே. எழுத்துப்பிழைகளெனிற் சார்பெழுத்து மறப்பு மீளவும் எழுத்தென்னையோ? நன்னூலை "இயைபில் பெயர்ச்சொற்றொடர்" என்றதையும் மறைப்பாரோ? "கற்போரினிதுணர்ந்துகொள்ளுமாறு 'தொகைவகைவிரியிற் றரப்பட்டது'" என்பதற்கு எழுவாய் தெரியாமையையும் மறைப்பாரோ? இதற்கு எழுவாய் தெரியாதாயின், தமிழ்ப்புலவர் சரித்திரம் உபக்கிரமணிகையில் பத்தாம்வரி முதலியவற்றையும், நன்னூல் மயிலைநாதருரையில் உரையாசிரியர் வரலாறு பதினொராம் வரியையும் நோக்குக. இன்னும் அவர் "காலஞ்சென்ற வித்துவான் ஸ்ரீமத் விசாகப்பெருமாளையரவர்கள் அரிய பெரிய ஆராய்ச்சிசெய்தெழுதிய இலக்கணச் சுருக்கத்தை விரித்துச் சுருக்கிப் புதுக்கி ஐயரவர்கள் இட்டபெயரோடு பதிப்பித்த இலக்கணச் சுருக்கம்" எனதனர். இலக்கணசுருக்கத்தை விசாகப்பெருமாளையரவர்கள் செய்ததற்குமுன், மகாலிங்கையரவர்கள்முதலியோர்செய்ததை விசாகப்பெருமாளையரவர்கள் செய்ததென்ற தெவ்வாறு பொருந்தும்? மகாலிங்கையரவர்கள்முதலியோர் செய்ததை விசாகப்பெருமாளையர் செய்ததெனக் கொள்ளுமவர் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் செய்ததை மறைப்பதென்னையோ? ஒருநூலைப் பலர் சுருக்கிச் செய்தால், ஒருவர்செய்ததை மற்றவர் செய்தார் என்றல் பொருந்துமா? ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள், சண்முக விருத்தியினும், செந்தமிழினுமுள்ள ஆராய்ச்சிகளைத் தமதெனக்கொண்டு, தமிழுணர்ச்சி சிறிதுமில்லாத ஆங்கிலப் புலவர்மாட்டு வரப்பயனைசாற்றுபவர்போன்றவரல்லரெனவும், "அரியகற்றுசற்றார் கண்ணுந்தெரியுங்கா, லின்மையரிதே வெளிறு" என்னுந்தேவர்குறளுக்கேற்ப அறிஞர்மாட்டும் பிழைகள் வருவதுண்மையேயாயினும், எழுத்துகடோறும், சொற்கடோறும், வாக்கியங்கடோறும், விஷயங்கடோறும் பிழைபற எழுதிப் பின் யாழ்ப்பாணப்புலவர் திருத்த, "பிழைதிருத்தம், பிழைதிருத்தம்" எனச் செந்தமிழ்ப் பலமுறை திருத்தங்கொள்ளுமவர் போன்றவரல்லர் எனவும் அவர் உணர்வாராக.

இங்ஙனம்.
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

விளம்பரம்.

விவேகாநந்தசபை கொழும்பு.

கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீமாந். தம்பையா முதலியார் அவர்கள் தர்மசத்திரத்தில் ஞாயிறு வாரந்தோறுஞ் சமய சந்தர்ப்பவாத்தியங்களோடு கதாப்பிரசங்கஞ் செய்வதற்கு இயன்ற கதாப்பிரசங்கி ஒருவர் விவேகாநந்தசபைக்குத் தேவையாயிருப்பதால் விருப்பமுடையோர் கொழும்பு விவேகாநந்தசபை லிகிதருக்கு கடித மூலம் நற்சாட்சிப்பத்திரம், வேண்டிய சம்பளம் முதலியனவற்றை விளக்கமாய்க் காட்டி எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ச. சோமசுந்தரம்,
சபை லிகிதர்.

கொழும்பு விவேகாநந்தசபை,
6-ம் நம்பர், மேட்டுத்தெரு, 26-5-20. (65)

மெடிக்கல் டிபாட்மென்றைச் சேர்ந்த ஒப்பந்தங்கள்.

1920-ம் ஆ ஐப்பசி மீ 1உ தொடக்கம் ஒருவருஷத்திற்கு அநுராதபுர, கேகாலை, கொலன்னறுவை, நக்குவாவை, இரத்தினபுரி என்னுமிடங்களிலுள்ள அரசாட்சியாரின் ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமான்கள் கொடுப்பதற்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரக் கடுதாசிகள் கொழும்பில் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து எடுக்கப்பட்டு, 1920-ம் ஆ ஆனி மீ 22உ மத்தியானம் 12 மணிக்குமுன் ஒப்பந்த விசாரணைக் கந்தோரிற் சேரவேண்டும். அந்த நேரத்துக்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

இன்னுந் தேவையான விபரங்களை, பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து, அல்லது அரசாட்சியாரின் "கசற்" பத்திரிகையிலிருந்து அறிந்துகொள்ளலாம். (73)

வைத்தியக்கந்தோர்ப்பகுதி ஒப்பந்தக் கடுதாசிகள்.

(72)

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரி, வைத்தியகாரர் ஆஸ்பத்திரி, கெந்தலையிலுள்ள குஷ்டரோகிகளின் ஆஸ்பத்திரிகளில் குசினியிற் கழிக்கப்படும் சாமான்களை விலைக்கு வேண்டுவதற்கு, 1920-ம் ஆண்டு அக்டோபர் மீ முதலாந்திகதி தொடக்கம் ஒன்று, இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்கு ஒப்பந்தக் கடுதாசிகள் கேட்கப்படுகின்றன.

ஒப்பந்தக்கடுதாசிகளெழுதவேண்டியபோம்ஸ், பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தக்கடுதாசிகள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசர் கந்தோரில், 1920-ம் ஆ ஜூன் மீ 22உ மத்தியானம் 12 மணிக்கு முன்பு கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைக்கப்படாத கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

இன்னும் வேண்டிய விபரங்களுக்கு கசற் பத்திரிகையைப் பார்க்கவும்; அல்லது பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசருக்கு எழுதி அறியவும்.

பாழ்நிலங்களின் கட்டளைச்சட்டத்தைப்பற்றிய அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடமையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1920-ம் ஞு (மே) வைகாசி மீ 28-ந் தேதி தவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897-ம், 1899-ம், 1900-ம், 1903-ம் ஆண்டுகளின் பாழ்நிலச்சட்டங்களின் 28-ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் பிறடிறிக் லூயிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடமையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப் பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

பிறடிறிக் லூயிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு:—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமாகாணம் மன்னார் டிஸ்திறிக் மாந்தை வடக்கு, மேற்குமூலை, பெருங்கள்ளிப்பத்து, மாந்தை தெற்கு, நானாட்டான் கிழக்கிலிருக்கும் செடுவரம்பு, பாலம்பிட்டி, சுளைகாமறுத்தமடு, புளியடிபிறக்கம், மருவரியன்கட்டையடம்பன், கொம்பன்சாய்ந்தகுளம், கோயிற்குளமென்னும் கிராமங்களிலிருக்கும் விபரித்தபடியே கீழ்க்குறிக்கப்படுங் காணித்துண்டுகள்:—

காட்டளைப் பிரதமபடம் 18.

காணித்துண்டு	காணிப்பெயர்.	விசாலம், ஏ. று. ப.
1	மடுக்காட்டுச்சேமிப்பு	55, 715 0 31
1A	சாத்தைப்பாதை	26 0 37
1B	அடிப்பாதை	14 0 26
2	காஞ்சுரைவிக்குத்திருகோணவளை ஸ்தானசசேமிப்பு	3 2 26
5	யோடிவல்	15 3 12
		55, 775 0 12

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய பற்றைக்காடு, முடிக்குரிய வெளிநிலம், மேற்படியாருக்குரிய பற்றைக்காடு விடத்தல்தீவிலிருந்து பாலம்பிட்டிக்குப் போகும் சாத்தைப்பாதை, (சாத்தைப்பாதைச்சேமிப்பு); கிழக்கு-முடிக்குரிய சோலைக்காடு, பாலம்பிட்டியிலிருந்து மடுவுக்குப் போகுங் குறுக்குறோட்டு (றோட்டுச் சேமிப்பு), முடிக்குரிய சோலைக்காடு, கரம்பைவிக்லு (முடிக்குரிய வெளிநிலம்), ஒரு றோட்டு, மடுவிலிருந்துவருங் குறுக்குறோட்டு (றோட்டுச்சேமிப்பு) 4881-ம் பிரதமபடம் / காணித்துண்டு1, மடுவிலிருந்துவருங் குறுக்கு றோட்டு (றோட்டுச்சேமிப்பு; தெற்கு-மடு றோட்டு ஸ்ரேஷனிலிருந்துவரும் றோட்டு, முடிக்குரிய சோலைக்காடு, மடுறோட்டு, ஸ்டேசனுக்கு விலத்திவிட்டடைக்கப்பட்ட நிலம், றெயில்பாதை (சேமிப்பு, மருவரியன்கட்டையடம்பன்கிராமத்துக்கு விலத்திவிட்டடைக்கப்பட்ட நிலம், முடிக்குரிய பற்றைகாடு; மேற்கு-முடிக்குரிய சோலைக்காடு, முடிக்குரிய வெளிநிலம் முடிக்குரிய சோலைக்காடு, முடிக்குரிய வெளிநிலம், முடிக்குரிய பற்றைக்காடு.

கவனிப்பு:—மேற்சொல்லிய எல்லைகளுட் பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் அவைகளின் விசாலத்தொகையாகும் 1 ஏக்கர் 2 றூட் 33 பேட்சம் மேற்சொல்லிய 55,775 ஏக்கர் 12 பேட்சக்குள்ளுமடங்கவில்லையென்பதையுங் கவனிக்க வேண்டியது:

காட்டளைப் பிரதமபடம்.

காணித்துண்டு,	காணிப்பெயர்	விசாலம். ஏ று ப.
3	137 192-ம் உ. ப. க் காணும் காணி	0 3 14
4	125,441-ம் டை	0 3 19
		1 2 33

(74)

அறிவித்தல் இல. 7552 மன்னார் வி. உ. 4-1920

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண்ணை கிழக்கு பஞ்சாட்சரக் குருக்கள் தியாகராசக் குருக்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டியனவாகிய நகைகளின் விபரம்:—

இல. 406, 2-1-19, ரூ. 20 ச. 2 வண்ணை மேற்குகணபதியார் சரவணை, இம்மிற்றேசன் டிம்பிபதக்கம் 1.

இல. 570 4-3-19, ரூ. 15 ச. 02 சங்குவேலி சின்னத்தம்பி பொன்னையா, காய்முகப்பு 1

இல. 611, 10-3-19 ரூ. 20 ச. 2 உடுவில் கணபதியார் இராமுப்பிள்ளை மோதிரம்1

இல. 746, 16-4-19 ரூ. 20 ச. 2 வண்மேற்கு ஆறுமுகம் தம்பிப்பிள்ளை வெள்ளிப்பாதசரம்சோடி1, வெ. அரைஞாண்கொடி 1

இல. 749, 17-4-19 ரூ. 20 ச. 2 கொக்குவில் வீரகத்தியார் நாகமணி தாலிக்கொடி 1

விற்பனவு:—1920ஆ ஆனி மீ 12உ சனிக்கிழமை பகல் 10 மணியளவில் டை தியாகராசக்குருக்களவர்கள் வீட்டில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையாஉடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

69

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிப்பவர்களாகிய திருக்கோணமலை 6-ம் நம்பர் காசுக்கடைவீதி மு. தாமோதரம்பிள்ளை, இராசலிங்கம் இடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டியனவாகிய நகைகளின் விபரம்.

1918-ம் ஞு தை மீ

நம்பர்.	உ.	ரூ.	ச.	அடைவுப்பொருள்விபரம்.
B 519	10	6	00	தோடு சோடி 1 [சோ.1
	ஆனி			
B1050	23	15		[சங்கிலிச் சோ.1 தோக்குச்சு மேலிடுசோ.1 கொப்புச்சிமி
	ஆடி			
B1074	2	6		சிறுமணிக்கோவை1 பி.இ.
B1094	9	7		தோடு சோடி 1
B1124	17	6		கொப்புச் சிமிக்கி சோடி 1
	ஆவணி			
C 30	10	7		சிறுதட்டுக்கேசி1 ஒ. இ.
C 46	14	26		டிமியுடன் பதக்கம் 1
C 47	14	12		கல்முருகு சோடி 1
C 64	17	8		சிறுசிவ.கடுக்.சோ. 1 சு. இ
C 78	22	10		குவளைமுத்து கடுக். சோ.1
C 112	29	6		முறி.குப்.கடு.சோ.1 தோக் [குச்சுவிற்சோடி 1
	புரட்டாதி			
C 168	11	12	50	வளையல் 7 தகடு 1 பூ இல்.
C 178	16	8		குவளைமுத்துக்கடு. சோ.1
	கார்த்திகை			
C 303	7	12		வெ. கொலிசு சோடி 1
C 361	26	30		தாலிக்கொடி 1
	மார்கழி			
C 392	7	8		குவளைக்கடு.சோ. 1 ச. இ.
C 405	14	16		சரடு 1 [த்த மாலை1
C 423	17	250		1/5 பிறஞ்சு பவுண் 60கோ
C 439	23	6	50	சிறு இதழ் திருகுபூ 1

விற்பனவு:—ரௌத்திரி ஞு ஆனி மீ 18உ (1920-ம்ஆ ஜூலாய் மீ 1உ) வியாழக்கிழமை பகல் 9மணி தொடக்கம் எடுபட்டநகை நீக்கலாக டை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாதஉடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

75

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந்தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா ௩.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ. உ, அணா அ.

3 பிரமேக வியாதிக்குச் சத்துச்செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்திலுஞ் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின்எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

க௦ மாத்திரை புட்டி ஒன்று ரூ. க, அணா அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ. உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ. க, அணா அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்.

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும். உஉ நாள் மருந்து ரூ. உ.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்திலுயர்ந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 0 க்கு ரூ 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோகால் திரேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் சுவேகமாய்க் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ச, டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!

உங்களுங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இதைப் பார்த்தவுடன் இதனடியிற் குறித்தவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வகைக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கருதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்ற சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னா பின்னா, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனா, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு கிடைக்குமா, க௦. கடன் எப்போது நிவிர்த்தியாகும், கக. விவகாரம ஜெயமாகுமா, கஉ. வினைத்தகாரியம் முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ. ௫.
பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம் எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனாமாக அனுப்புவோம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும். 11

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்
றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி
விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.